[2013 ஏப்ரல் 25

** துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். உதாரணமாக, அவ்வாறு அங்கு ஏதாவது ஒரு நிகழ்வு நடந்து, வர முடியாத சூழ்நிலை இருந்தால் அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் சொல்லலாம். அதுமாதிரி ஒரு சூழல் சிறு அளவில்கூட நடைபெறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொன்ன அந்த வார்த்தைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஆதாரம் இல்லாமல் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 318, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

318—

தங்கும் அறைகள்

***22237—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் சுற்றுப் பகுதிகளிலுள்ள திருத்தலங்களுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் அறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. தங்கும் விடுதி கட்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 25]

அளவிற்கு தேவையான காலியிடம் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக இல்லை. எனவே, பக்தர்கள் தங்கும் வசதியுடன் விடுதி கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு தஞ்சாவூர் நகரைச் சுற்றியுள்ள திருத்தலங்களான கண்டியூர் அருள்மிகு அரசாபவிமோச்சனப் பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், திருக்கருகாவூர் அருள்மிகு முல்லைவனநாதர், கர்ப்பரட்சாம்பிகை திருக்கோயிலுக்கு ரூ.8.6 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்குவதற்கு ஓய்வுக் கூடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபின், பக்தர்கள் நலன் கருதி திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலுக்கு ரூ.1.44 கோடியிலும், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.86 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்குவதற்குண்டான அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரம் கேட்கும் வாய் மூடும் முன்னே வரம் தருகின்ற வாழும் வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தஞ்சை தொகுதியில் உலகப் பிரசித்திபெற்ற பெரிய கோயில் இன்றைக்கு உலக அளவிலிருந்து யாத்ரீகர்களையும், பக்தர்களையும் மிகப் பெரிய அளவில் ஈர்க்கின்ற கோயிலாக இருக்கின்றது. ஆயிரக்கணக்கில் அந்தப் பெரிய கோயிலைப் பார்ப்பதற்கும் தினந்தோறும் பக்தர்கள் அங்கு தரிசனம் செய்வதற்கும் வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நகரிலே நமது துறையின் சார்பில் காலி இடம் ஏதும் இல்லை என்றாலும், அந்தத் திருத்தலத்திற்கு வரும் பக்தர்கள் சிரமமின்றி தங்குவதற்கு ஏதுவாக தங்கும் விடுதியைக் கட்டித் தர வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதனை அமைத்துத் தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் ஏதும் இல்லை என்றாலும், அந்த நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலே இருக்கின்ற கோயில் ஸ்தலங்களிலே பல்வேறு இடங்களிலே பக்தர்கள் தங்கும் விடுதிகளைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அவற்றை அங்கு வரும் பக்தர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண்கள் 319 மற்றும் 320 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

புதிய மின் திட்டங்கள், மின் வழங்கல் கட்டமைப்பு மேம்பாடு, வீட்டு சூரிய சக்தி பயனீட்டாளர்களுக்கு ஊக்கத் தொகை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும், இளைய சமுதாயத்தினர் முன்னேற்றம் அடைவதற்கும் முக்கிய காரணியாக விளங்குவது, மாறி வரும் இன்றைய நவீன வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் மின்சாரம் என்று சொன்னால் அது மிகையாகாது.*

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மைவாய்ந்த மின்சாரத்தின் தேவை தமிழ்நாட்டில் அதிகரித்துக்கொண்டே செல்வதைக்